# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## செய்தித்தாள்

எண்.7 நாள்: 6.2.2026

1949–ஆம் ஆண்டு தமிழ்நாடு பதிவு விதி 55–A–இன்படி அசல் உரிமை மூல ஆவணம் அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற பதிவேடுகளை அசையாச் சொத்துகள் தொடர்பாக, ஆவணங்களைப் பதிவு செய்யும் நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கட்டளையிடும் நோக்கத்தை எய்துவதற்கும் மற்றும் ஆவணங்களைப் பதிவு செய்வதில் மோசடி, பொய்யாவணம் புனைதல் மற்றும் ஆள்மாறாட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், 1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் (மையச் சட்டம் XVI/1908) மாநில சட்டத்திருத்தத்தின் வாயிலாக தகுந்த வகையங்களை உட்புகுத்த வழிவகை செய்ய விழையும், 2025–ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2025) 29.4.2025–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்று, 9.1.2026–ஆம் நாளன்று மாண்புமிகு குடியரசுத்தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பெற்று, 23.1.2026–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் தமிழ்நாடு சட்டம் 1/2026 ஆக வெளியிடப்பெற்றுள்ளதென உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெறுகிறது.

முனைவர் கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.